©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 8.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 51] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 20, 2017
மார்கழி 5, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2D) எண் 37, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 2 ஜூன் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006 – இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 06.02.2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 115–117 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/157/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* | | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ.பை)* |
| --- | --- | --- |
| | (1) | (2) |
| **விலங்கின் ரோமத்தை நீக்குகிற பகுதி** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. | தோலை பளபளபாக்குபவர் | 161.50 |
| 3. | ஸ்கட்டர்கள் | 161.50 |
| 4. | ஆட்டின தோலை உரிப்பவர் | 161.50 |
| **தோல் பதனிடுதல் மற்றும் சாயம் தோய்க்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. | கொள்கலன் எடுத்துச் செல்பவர்கள் | 160.00 |
| 3. | ரோமம் நீக்குபவர்கள் | 164.00 |
| 4. | மயிரிழையைப் பகுப்பவர்கள் | 164.00 |
| 5. | ரோமம் நீக்க கற்றுக்கொள்பவர் | 160.00 |
| 6. | பாமிங் உதவியாளர்கள் | 160.00 |
| **சீரமைக்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. | இயந்திரத்தை இயக்குபவர் | 160.00 |
| 3. | கையினால் சீரமைப்பவர் | 160.00 |
| **அடுக்கி வைக்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. | பஸ்டர்கள் | 160.00 |
| 3. | அடுக்கி வைப்பவர்கள் | 160.00 |
| **இறுத்தெடுக்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. | இறுத்தெடுப்பவர்கள் | 160.00 |
| **பணி நிறைவுப் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. | பதப்படுத்துபவர்கள் | 160.00 |
| 3. | தெளிப்பவர்கள் | 160.00 |

| *பணியாளர்களின் வகைகள்* | | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு* |
|---|---|---|
| *(1)* | | *(2)* (ரூ.பை.) |
| **பணி நிறைவு பணியாளர் பிரிவு** | | |
| **1.** | உதவி செய்பவர்கள் | **160.00** |
| **2.** | முரட்டுத்தோல் இயந்திரத்தை இயக்குபவர் | **160.00** |
| **3.** | சாணைக்கல் சக்கரத்தை இயக்குபவர் | **160.00** |
| **4.** | பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர் | **160.00** |
| **5.** | சீராக்குபவர்கள் | **160.00** |
| **6.** | அழுத்துகிற இயந்திரத்தை இயக்குபவர்கள் | **160.00** |
| **7.** | கைகளினால் சலவை செய்பவர்கள் | **160.00** |
| **8.** | தாடை ரோமம் நீக்குபவர்கள் | **160.00** |
| **9.** | பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர்கள் | **163.00** |
| **பௌண்டரி பிரிவு** | | |
| **1.** | உதவி செய்பவர்கள் | **160.00** |
| **2.** | பொருத்துநர்கள் | **163.00** |
| **3** | ஒட்டுநர்கள் | **165.00** |
| **4.** | கல் தச்சர் | **163.00** |
| **5.** | தச்சர்கள் | **163.50** |
| **6.** | பொருத்துநர்கள், ஓட்டுநர்கள் (கற்றுக் கொள்பவர்கள்) | **160.00** |
| **புழக்கடை பிரிவு** | | |
| **1** | டீமர்கள் | **160.00** |
| **2** | சீரமைப்பவர்கள் | **160.00** |
| **பொது** | | |
| **1** | மேஸ்திரிகள் | **4910.00** |
| **2** | எழுத்தாளர்கள்/காசாளர்கள் | **4910.00** |
| **3** | காவலாள் | **4858.00** |

**ஏனைய தோல் பதனீட்டு தொழிற்சாலைகள்**

*(i)* விலங்கின் ரோமத்தை நீக்குகிற குழியில் அல்லது தோலை நீக்குகிற குழியில் தோல் மற்றும் உரிவைகளைப் பதனிடுவதற்கு, முதல் யூனிட்டுக்கு ரூபாய் **54.09** காசுகள் மற்றும் வேலை செய்யப்படுகிற ஒவ்வொரு கூடுதல் யூனிட்டிற்கும் ரூபாய் **5.64** காசுகள் வீதம் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

*(ii)* பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு ரூபாய் **160.00** வழங்கப்பட வேண்டும்.

**செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்கள்:**

விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் முதல் யூனிட்டைப் பொறுத்த வரையில், செய்யப்பட்ட வேலைக்காக, ரூபாய் **84.51** காசுகளும், வேலை செய்யப்படுகிற ஒவ்வொரு கூடுதல் யூனிட்டிற்கும் ரூபாய் **37.19** காசுகள் வீதமும் ஊதியம் வழங்கப்பட வேண்டும். விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் வேலை செய்யப்பட்ட ஒவ்வொரு கூடுதல் யூனிட் ரூ. **5.64** வழங்கப்பட வேண்டும்.

**தோல் பதனீட்டு மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் உள்ள பொதுவான வகைகள்**

| | | |
|---|---|---|
| (1) எழுத்தர்/காசாளர் | – | மாதமொன்றுக்கு ரூபாய் **4910.00** |
| (2) மேஸ்திரிகள் அல்லது மேற்பார்வையாளர்கள் | – | மாதமொன்றுக்கு ரூபாய் **4910.00** |
| (3) காவலாள் | – | மாதமொன்றுக்கு ரூபாய் **4858.00** |

**விளக்கங்கள்**

*(i)* மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்படப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும். அகவிலைப்படியை கணக்கிடுவதற்கு 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதன் அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 176 புள்ளிகளாகும்). 176 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு 90 காசுகள் (தொண்ணூறு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

*(iii)* ஏதேனும் தோல் பதனீட்டு தொழிற்சாலை மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்களை பணியில் அமர்த்துகிறவிடத்து, வழக்கமான வேலை நாள் ஒன்றுக்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குகிற ஊதியம், அந்த வகையினருக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைவிட குறைவாக இருக்கக்கூடாது.

*(iv)* நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

*(v)* மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

*(vi)* தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 38, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 2 ஜூன் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 11–09–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 617–618 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/699/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் கருங்கல் தொழிலில் பணியமர்த்தப்பட்டு கீழேயுள்ள விவர அட்டவணையின் (2)ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3)ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## கருங்கல் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | | |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | | |
| | | *மண்டலம் A (ரூ. காசு)* | *மண்டலம் B (ரூ. காசு)* | *மண்டலம் C (ரூ. காசு)* | *மண்டலம் D (ரூ. காசு)* |
| | **நிலை – I** | | | | |
| 1 | மேலாளர் | 10851.00 | 10687.00 | 10522.00 | 10358.00 |
| 2 | அடையாளமிடுபவர்/வடிவமைப்பவர் | | | | |
| 3 | தரக்கட்டுப்பாட்டாளர்/செதுக்குபவர் | 10031.00 | 9866.00 | 9702.00 | 9539.00 |
| 4 | இயந்திர மேற்பார்வையாளர் | | | | |
| 5 | மின் மேற்பார்வையாளர் | 9539.00 | 9375.00 | 9210.00 | 9046.00 |
| 6 | தானியங்கி மெருகேற்றுபவர் | | | | |
| | **B நிலை – II** | | | | |
| 7 | துளையிடுபவர் | | | | |
| 8 | மின்பணியாளர் | 9210.00 | 9088.00 | 8966.00 | 8843.00 |
| 9 | பொருத்துநர் | | | | |
| 10 | பற்றவைப்பவர் | | | | |
| 11 | சாணை பிடிப்பவர் | | | | |
| 12 | மெருகேற்றுபவர் | | | | |
| 13 | வெட்டுங்கருவி இயக்குபவர் | | | | |
| 14 | உளி கொத்துபவர் | | | | |
| 15 | குழாய்வேலை செய்பவர் | 9046.00 | 8924.00 | 8801.00 | 8679.00 |
| 16 | டிப்பர் ஓட்டுநர் (Tipper Driver) | | | | |
| 17 | டிரெயிலர் ஓட்டுநர் (Trailor Driver) | | | | |
| 18 | காங் ட்ரீ ஓட்டுநர் (Gang Tree Driver) | | | | |
| 19 | பாரந்தூக்கி இயக்குபவர் | | | | |
| 20 | காங் சா இயக்குபவர் (Gang Saw Operator) | | | | |
| 21 | கணினி இயக்குபவர் | | | | |
| 22 | கணக்காளர் | | | | |
| 23 | பண்டகசாலை காப்பாளர் | | | | |
| | **C நிலை – III** | | | | |
| 24 | எழுத்தர்/காசாளர் | | | | |
| 25 | பண்டகசாலை உதவியாளர் | | | | |
| 26 | ஸ்லிங்கர் (Slinger) | | | | |
| 27 | சாம்பரிங்மேன் (Chambering Man) | 8554.00 | 8473.00 | 8390.00 | 8227.00 |
| 28 | சாமணந்தூக்கி இயக்குபவர் | | | | |

| தொடர் எண் (1) | பணியாளர்களின் வகை. (2) | மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (3) | | | |
|---|---|---|---|---|---|
| | | மண்டலம் A (ரூ. காசு) | மண்டலம் B (ரூ. காசு) | மண்டலம் C (ரூ. காசு) | மண்டலம் D (ரூ. காசு) |
| 29 | தச்சுவேலை செய்பவர்/சிப்பமாக்குபவர் | | | | |
| 30 | கணினி உதவியாளர் | | | | |
| 31 | மின் உதவியாளர் | | | | |
| 32 | இயந்திர உதவியாளர் | | | | |
| | **D நிலை – IV** | | | | |
| 33 | அலுவலக உதவியாளர் | | | | |
| 34 | காவலாள்/பாதுகாவலாள் | | | | |
| 35 | சுத்தம் செய்பவர்/பெருக்குபவர் | 8227.00 | 8187.00 | 8145.00 | 8104.00 |
| 36 | சுமை ஏற்றுபவர் (மற்றும் மேற்சொன்ன எந்த வகைகளின் கீழ் வராத தொழிலகத்தின் ஏனைய பணியாளர் அனைவரும்) | | | | |

***விளக்கங்கள்:***— (1) மண்டலங்களின் வகைப்பாடு பின்வருமாறு :

***மண்டலம்–A*** – அனைத்து மாநகராட்சிகள்.

***மண்டலம்–B*** – மூன்றாம் நிலை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகள்.

***மண்டலம்–C*** – அனைத்து பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பாளையங்கள்.

***மண்டலம்–D*** – மண்டலம் A, B மற்றும் C–இன்கீழ் வராத ஏனைய பகுதிகள்.

**II (1). அகவிலைப்படி:–** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*a*) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகளாகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 50.30 காசுகள் (ஐம்பது ரூபாய் முப்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*b*) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(*c*) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(3)** நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட மாதாந்திர ஊதியத்தை 26–ஆல் வகுக்கவேண்டும்.

**(4)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பெ. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 8 ஜூன் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறும் ஏதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 20—11—2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2இல் 766 மற்றும் 767ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/874/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் படக்காட்சி தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (2)ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3)ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**படக்காட்சித் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை.* | *திங்களொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் ரூ. காசு* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | **வகை-I** | | | |
| 1. | மேலாளர் | 9360.00 | 8787.00 | 8288.00 |
| | **வகை-II** | | | |
| 1. | உதவி மேலாளர் | 8787.00 | 8427.00 | 8092.00 |
| 2. | மேற்பார்வையாளர் | | | |
| 3. | திரைப்படம் இயக்குபவர் | | | |
| 4. | கணக்காளர் | | | |
| 5. | காசாளர் / எழுத்தர் | | | |
| 6. | மின் கம்மியர் | | | |
| | **வகை-III** | | | |
| 1. | திரைப்படம் இயக்கும் பயிற்சி பெறுபவர் | 8245.00 | 8007.00 | 8007.00 |
| 2. | நுழைவுச் சீட்டு வழங்குபவர் | | | |
| 3. | வாயிற் காப்பாளர் | | | |
| 4. | நுழைவுச் சீட்டு சேகரிப்பவர் | | | |
| 5. | இயந்திரக் கம்மியர்/ சீர்வளி சாதனம் இயக்குபவர் | | | |
| 6. | காவலாள் / வழிகாட்டுபவர் | | | |

**வகை-IV**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | துடைப்பவர் | | | |
| 2. | அலுவலகப் பையன் | | | |
| 3. | சிப்பமாக்கும் உதவியாளர் | | | |
| 4. | மிதிவண்டிப் பையன் | 8136.00 | 8007.00 | 8007.00 |
| 5. | துப்புரவுப் பணியாளர் | | | |
| 6. | தோட்டக்காரர் | | | |
| 7. | பெருக்குபவர் | | | |
| 8. | மேற்குறித்தவற்றில் சேராத பணியாளர் வகையினர் | | | |

**(1) *விளக்கங்கள்:—* மண்டலங்களின் வகைப்பாடு: A,B மற்றும் C**

மண்டலங்களில் பின்வரும் பகுதிகள் அடங்கும்.

1. ***மண்டலம்—A*** — மாநகராட்சிகள், முதல் நிலை நகராட்சிகள் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள்

2. ***மண்டலம்—B*** — இரண்டு மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகள், நகரியங்கள், பாளையங்கள் மற்றும் பேரூராட்சிகள்

3. ***மண்டலம்—C*** — ஊராட்சிகள்

**(2) அகவிலைப்படி:—**மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கபப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ.49.70 (நாற்பத்தொன்பது ரூபாய் எழுபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழக்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து, முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும் போது ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 41, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 8 ஜூன் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு. அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன இரண்டு திங்கள் கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற எதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்தரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 10—04—2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 250 மற்றும் 251 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/303/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் கடல்படு உணவைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**கடல்படு உணவைப் பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* |
|---|---|
| | *(ரூ. காசு.)* |
| *(1)* | *(2)* |
| **அ. நிருவாகப் பணியாளர்கள்:** | |
| 1. மேலாளர் | 6808.00 |
| 2. உதவி மேலாளர் | 5723.00 |
| 3. காசாளர் | |
| 4. கணக்காளர் | 5394.00 |
| 5. உதவியாளர்/எழுத்தர் | 5289.00 |
| 6. தட்டச்சர் | 5177.00 |
| 7. ஒட்டுநர் | |
| 8. குற்றேவலர்/எவலாள் | 4960.00 |
| 9. காவலாள் | 5073.00 |

**ஆ. தொழிற்சாலைப் பணியாளர்கள்**

| *பணியாளர்களின் வகைகள்* | | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* |
|---|---|---|
| | | *(ரூ. காசு.)* |
| | *(1)* | *(2)* |
| 1. | பொறியாளர் | 7891.00 |
| 2. | உற்பத்திப் பொறுப்பாளர் | 6808.00 |
| 3. | உற்பத்தி மேற்பார்வையாளர். | 6158.00 |
| 4. | மேற்பார்வையாளர்கள் (தளவாடம்/பதப்படுத்தல்/ கொள்முதல்/சிப்பம் செயதல்) | 6158.00 |
| 5. | உதவி மேற்பார்வையாளர்கள் | 5723.00 |
| 6. | தளவாடத்தை இயக்குபவர் | 6158.00 |
| 7. | தொழில் நுட்பாளர் | 6158.00 |
| 8. | மின் கம்பி பணியாள் | 5723.00 |
| 9. | இயந்திர கம்மியர் | 5723.00 |
| 10. | பதப்படுத்தும் பணியாளர் | 5506.00 |
| 11. | தோல் உரிக்கும் தொழிலாளர் | 5393.00 |
| 12. | தரம் பிரிக்கும் தொழிலாளர் | 5393.00 |
| 13. | சிப்பம் செய்பவர் | 5177.00 |
| 14. | பதப்படுத்தும் உதவியாளர் | 5177.00 |
| 15. | சுத்தம் செய்யும் அடுக்கிவைக்கும் தொழிலாளர்கள் | 5177.00 |
| 16. | உதவியாட்கள் (அனைத்து வகையினரும்) | 5177.00 |
| 17. | பாரம் ஏற்றி/இறக்கும் தொழிலாளர்கள் | 4960.00 |
| 18. | மேற்சொன்ன யாதொரு வகைப்பாட்டின் கீழ் வராத தொழிலாளர்கள். | 5177.00 |

**விளக்கங்கள்.—(1) அகவிலைப்படி.—** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய ஊதியங்களுடன், பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழக்கப்பட வேண்டும்:—

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ.30.80 (ரூபாய் முப்பது மற்றும் எண்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு. ஒவ்வோராண்டும் எப்பரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்கவேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்படுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

பெ. அமுதா,
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

ந. அருள்,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 43, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 9 ஜூன் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு. அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன இரண்டு திங்கள் கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்தரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 04.09.2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 2 இல், 605 மற்றும் 606 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/684/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் சலவையகங்கள் மற்றும் துணிகள் துவைத்தல் (கம்பளி உட்பட) தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணி வகைகளுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**சலவையகங்கள் மற்றும் துணிகள் துவைத்தல் (கம்பளி உட்பட) தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணி வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு 8 மணி நேரப் பணிக்கு)*<br>*ரூ. காசு* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/48) அல்லது தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டத்தின் அல்லது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் சலவையகங்களில் துணிகள் துவைத்தல் | 337.00 |

| *தொடர் எண்.* | *பணி வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு 8 மணி நேரப் பணிக்கு) ரூ. காசு* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3).* |
| 2. | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/48) அல்லது தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டத்தின் அல்லது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் சலவையகங்களில் துணிகளுக்குப் பெட்டி போடுதல். | 343.00 |
| 3. | மேற்சொன்ன இனம் (1) இல் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக சலவையகங்களில் துணிகளைத் துவைத்தல். | 342.00 |
| 4. | மேற்சொன்ன இனம் (2) இல் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக சலவையகங்களில் துணிகளுக்கு பெட்டி போடுதல். | 349.00 |

**விளக்கங்கள்.— (1)** குறைந்தளவு ஊதிய வீதங்கள் ரொக்கமாக வழங்கப்படும்.

**(2) அகவிலைப்படி.—** மேலே குறிப்பிடப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் தொழிலாளர்களுக்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழக்கப்பட வேண்டும்:—

*(i)* மேலே அறிவிக்கையிடப்பட்ட ஊதியங்கள், 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளன (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு ரூ.2.05 (ரூபாய் இரண்டு மற்றும் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டின் (அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரையில்) சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில், இத்திருத்தம், இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) தினப்படி ஊதிய வீதங்கள் மற்றும் அகவிலைப்படியில் விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

(5) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 59, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 20 செப்டம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 24—04—2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு—2 இல் 290 மற்றும் 291 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா/333/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் யாதொரு மலைத்தோட்டத்தில் அதாவது சின்கோனா, ரப்பர், தேயிலை, காஃபி பயிரிடும் நோக்கத்திற்காக பராமரிக்கப்படுகின்ற

யாதொரு மலைத்தோட்டத்தில் (Estate) பணியமர்த்தப்பட்டுள்ளவர்களும், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(1)** நெடும்பத்தியில் குறிப்பிட்டுள்ள வகைகளைச் சேர்ந்தவர்களுமாகிய பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் **(5)** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**யாதொரு மலைத்தோட்டத்தில் அதாவது சின்கோனா, ரப்பர், தேயிலை, காஃபி அல்லது ஏலக்காய் பயிரிடும் நோக்கத்திற்காக பராமரிக்கப்படுகின்ற யாதொரு மலைத்தோட்டத்தில் வேலைவாய்ப்பு.**

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு)* | | |
|---|---|---|---|
| | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவை நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சின்கோனா தோட்டங்கள். | காஃபி மற்றும் ஏலக்காய் தோட்டங்கள். | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்கள். |
| *(1)* | *(2)* | | |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| உரிய வயதடைந்தவர் | **183.50** | **182.00** | **188.50** |
| இளம் பருவத்தினர் | **124.00** | **123.00** | **127.50** |

**விளக்கங்கள்.–** **(1)**அகவிலைப்படி:– (a) மேற்சொன்ன குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் **2010** ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது அதாவது **2001** ஆம் ஆண்டில் **100** புள்ளிகள் என்பதன் அடிப்படையாகக்கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட **161** புள்ளிகளாகும்) **161** புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது மேற் குறிப்பிடப்பட்ட மலைத்தோட்டங்களில் பணி புரியும் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| உரிய வயதடைந்தவர் | ரூ **1.10** (நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு புள்ளிக்கும் ஒரு ரூபாய் பத்து காசுகள்) |
| வளரிளம் பருவத்தினர் | நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு புள்ளிக்கு **76** காசுகள் |

(b) சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு அதாவது **2001** ஆம் ஆண்டில் **100** புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு முந்தைய இரண்டாம் காலாண்டை தொடக்கமாகக் கொண்டு ஜூலை அக்டோபர், ஜனவரி, ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து முறையே ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் திங்கள் முதல் நாளில் அகவிலைப்படியானது திருத்தியமைக்கப்பட வேண்டும்.

**(2)** ரப்பர் தோட்டங்களில் ரப்பர்பால் வடிக்கும் தொழிலாளர்களுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் பின் வருமாறு

(a) உத்தரவாத கால வீதம்–நாளொன்றுக்கு ரூ.**94.60**

(b) குறைந்தளவு ஊதிய வீதங்கள்.

**வகை–I** (ஏக்கர் ஒன்றுக்கு **113** கிலோகிராம் வரை விளைச்சல் – ஆண்டொன்றிற்கு **0.404686** எக்டேர்) முதல் **1 1/2** கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.**31.53**

**வகை–II** (ஏக்கர் ஒன்றுக்கு **113** கிலோகிராமிற்கு அதிகமாகவும் **181** கிரோகிராம் வரையிலுமான விளைச்சல் – **0.404686** எக்டேரில்) ஆண்டொன்றிற்கு முதல் **2 1/2** கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.**18.92**

**வகை–III** (ஏக்கர் ஒன்றுக்கு **181** கிலோகிராமுக்கு அதிகமாகவும் **272** கிலோகிராம் வரையிலான விளைச்சல் ஆண்டொன்றிற்கு **0.404686** எக்டேர்) முதல் **4 1/2** கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.**10.51**

**வகை—IV** (ஏக்கர் ஒன்றுக்கு 272 கிலோகிராமிற்கும் அதிகமான விளைச்சல் ஆண்டொன்றிற்கு 0.404686 எக்டேர்) முதல் 6½ கிலோகிராம் வரை உலர் ரப்பருக்கு ஒவ்வொரு அரை கிலோகிராமிற்கு ரூ.7.28.

(c) ஏனைய காலமுறை வீத ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்தத்தக்கவாறான அகவிலைப்படி.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் ஷர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2 D) எண் 62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 11 அக்டோபர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 08—06—1977ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம் II பிரிவு 2 இல் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/2782(a)/77 மற்றும் II(2)/LE/2782(b)/77 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்னச் சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் யாதொரு உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அதுநாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

## யாதொரு உள்ளாட்சி அமைப்பின் கீழ் வேலைவாய்ப்பு

### I - யாதொரு உள்ளாட்சி அமைப்பு—அனைத்து மாநகராட்சிகளின் கீழ் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மாதமொன்றுக்கு* | *நாளொன்றுக்கு (8 மணி நேரம்)* | *மணி ஒன்றுக்கு* |
| | | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* |
| | | (I) | (II) | (III) |
| (1) | பயிற்சி பெறாதவர்கள் | **13000.00** | **500.00** | **62.50** |
| (2) | ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 15000.00 | 577.00 | 72.00 |
| | **நிலை—II** | 14000.00 | 538.00 | 67.00 |
| (3) | பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 17000.00 | 654.00 | 82.00 |
| | **நிலை—II** | 16000.00 | 615.00 | 77.00 |

**II - யாதொரு உள்ளாட்சி அமைப்பு—அனைத்து நகராட்சிகளின் கீழ் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்.* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மாதமொன்றுக்கு* | *நாளொன்றுக்கு (8 மணி நேரம்)* | *மணி ஒன்றுக்கு* |
| | | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* |
| | | (I) | (II) | (III) |
| (1) | பயிற்சி பெறாதவர்கள் | **10000.00** | **385.00** | **48.00** |
| (2) | ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 13000.00 | 500.00 | 62.50 |
| | **நிலை—II** | 12000.00 | 462.00 | 58.00 |
| (3) | பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 15000.00 | 577.00 | 72.00 |
| | **நிலை—II** | 14000.00 | 538.00 | 67.00 |

**III - யாதொரு உள்ளாட்சி அமைப்பு — அனைத்து பேரூராட்சிகளின் கீழ் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்.* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மாதமொன்றுக்கு* | *நாளொன்றுக்கு (8 மணி நேரம்)* | *மணி ஒன்றுக்கு* |
| | | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* |
| | | (I) | (II) | (III) |
| (1) | பயிற்சி பெறாதவர்கள் | **8000.00** | **308.00** | **38.50** |
| (2) | ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 11000.00 | 423.00 | 53.00 |
| | **நிலை—II** | 10000.00 | 385.00 | 48.00 |
| (3) | பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 13000.00 | 500.00 | 62.50 |
| | **நிலை—II** | 12000.00 | 462.00 | 58.00 |

**IV - யாதொரு உள்ளாட்சி அமைப்பு—அனைத்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் கீழ் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்.* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மாதமொன்றுக்கு* | *நாளொன்றுக்கு (8 மணி நேரம்)* | *மணி ஒன்றுக்கு* |
| | | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* | *(ரூ. காசுகள்)* |
| | | (I) | (II) | (III) |
| (1) | பயிற்சி பெறாதவர்கள் | **6000.00** | **231.00** | **29.00** |
| (2) | ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 9000.00 | 346.00 | 43.00 |
| | **நிலை—II** | 8000.00 | 308.00 | 38.50 |
| (3) | பயிற்சி பெற்றவர்கள் | | | |
| | **நிலை—I** | 11000.00 | 423.00 | 53.00 |
| | **நிலை—II** | 10000.00 | 385.00 | 48.00 |

## யாதொரு உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் நிலைகளின் கீழ் உள்ள வகைகள்

**பயிற்சி பெறாதவர்கள்**

1. தள்ளுவண்டி மஸ்தூர்
2. துப்புரவுப் பணியாளர்கள்
3. பெருக்குபவர்கள்
4. காவலாள்
5. தோட்டக்காரர்
6. சுத்தம் செய்பவர்
7. ஆயாக்கள்
8. மின்கம்பியாள் உதவியாளர்
9. படகு ஓட்டுபவர்
10. எலி பிடிப்பவர்/நாய் பிடிப்பவர்
11. மசால்ச்சி
12. முரசு கொட்டுபவர் (கிராமம்)
13. வால்வை இயக்குபவர் (குடிநீர் வழங்கல்)
14. புல் வெட்டுபவர் (பால் பண்ணைகள்)
15. பால் வழங்கும் சிற்றேவலாள் (டெய்ரி பாய்)
16. செயின்மேன்
17. கழிவுநீரை அளவீடு செய்யும் பணியாளர்/நீர் அளவைமானி பணியாளர்
18. வடிகால் நீரை வெளியேற்றுபவர்
19. ஏவலாள்
20. பாதுகாவல் பணிப்பொறுப்பாளர்
21. அலுவலக உதவியாளர்
22. மேற்சொன்னவற்றின் கீழ் குறிப்பிடப்படாத ஏனைய யாதொரு, பயிற்சி பெறாத வகையினர்

**ஓரளவு பயிற்சி பெற்றவர்கள்:**

**நிலை I**

1. மேலாள்
2. நோய் கட்டுப்பாட்டு மேலாள் (மலேரியா, டெங்கு, முதலியவை)
3. பண்டகசாலை மேலாள்
4. குழாய்த் தொடர் பொருத்துபவர்
5. விளையாட்டு மைதானப் பணியாளர் (விளையாட்டுப் பகுதிகள்)
6. பணிமனை மேலாள்
7. கழிவுநீர் மேலாள்
8. துளையிடுபவர்
9. அரைப்பவர்
10. கழிவுநீர் பண்ணை மேலாள்

11. வடிகால் மேலாள்
12. அங்காடி மேலாள்
13. கலவை உர மேலாள்
14. மேற்சொன்னவற்றின் கீழ் குறிப்பிடப்படாத ஏனைய யாதொரு, ஓரளவு பயிற்சி பெற்ற வகையினர்.

**நிலை II**

1. குழாய்ப்பணி உதவியாளர்
2. சுத்தம் செய்பவர்கள் (இயந்திரம் தளவாடங்கள் முதலியவை)
3. பூஸ்டர் மேன் பம்பு
4. உதவி பொருத்துநர்
5. வாயிற்காவலர்
6. மேல் நிலைத் தொட்டி இயக்குபவர்
7. தரவு உள்ளிட்டாளர்கள்
8. எழுத்தர்
9. வரித்தண்டலர்
10. ஓட்டுநர்கள்
11. பம்பு இயக்குபவர்
12. மேற்சொன்னவற்றின் கீழ் குறிப்பிடப்படாத ஏனைய யாதொரு, ஓரளவு பயிற்சி பெற்ற வகையினர்.

**பயிற்சி பெற்றவர்கள்**

**நிலை I**

1. இயந்திரக் கம்மியர்
2. மேற்சொன்னவற்றின் கீழ் குறிப்பிடப்படாத ஏனைய யாதொரு, பயிற்சி பெற்ற வகையினர்

**நிலை II**

1. குழாய் பொருத்துநர்கள்
2. கொத்தனார்
3. பொருத்துநர்கள்
4. மின் கம்மியர்கள்
5. கணினி இயக்குபவர்
6. தொழில்நுட்ப உதவியாளர்
7. மின்கம்பியாள்
8. ஊராட்சி செயலாளர் மற்றும் கணினி இயக்குபவர்
9. மேற்சொன்னவற்றின் கீழ் குறிப்பிடப்படாத ஏனைய யாதொரு, பயிற்சி பெற்ற வகையினர்

**விளக்கம்-I**

**பகுதி நேரப் பணியாளர்கள்:—**

*(i)* **குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்:** கால அளவு வீதத்தில் பகுதி நேரப் பணியாளர்கள் பணியமர்த்தப்படும் இடங்களில், நாளொன்றுக்கான அவர்களின் குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள், நெடும்பத்தி எண் **3 (ii)—**ன் படி கணக்கிடப்பட

வேண்டும் மற்றும் மணி ஒன்றுக்கான அவர்களின் குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள், அட்டவணைகளின் நெடும்பத்தி எண் 3 (iii)—ன் படி கணக்கிடப்பட வேண்டும்.

*(ii)* **அகவிலைப்படி:** குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் அவர்கள் பணிபுரிந்த நாளின் அல்லது மணியின் வீதாச்சராத்தைக் கணக்கிட்டு, அகவிலைப்படியானது வழங்கப்பட வேண்டும்.

**விளக்கம் - II (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன், பணியாளர்களுக்கு, கீழே குறிப்பிடப்பட்டுளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது, 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது, மாதமொன்றுக்கு ரூ. 37.25 (முப்பத்தேழு ரூபாய் இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

*(ii)* அகவிலைப்படியானது, சனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* அகவிலைப்படியின் முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும் போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாத ஊதியத்தைக் கணக்கிட ஒரு நாள் ஊதியத்தை, 30ஆல் பெருக்க வேண்டும்.

(4) ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிட, மாத ஊதியத்தை, 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) மணி அடிப்படையிலான ஊதியத்தைக் கணக்கிட, ஒரு நாள் ஊதியத்தை, 8ஆல் வகுக்க வேண்டும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும், அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2 D) எண் 64, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 17 அக்டோபர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழகப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05.03.2014 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 323 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/242/2014 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் நேர்விற்கேற்ப அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நீங்கலாக, அரசு மானியமின்றி வர்த்தக ரீதியாக நடத்தப்படும் கல்வி பயிற்சி நிறுவனங்களில், அதாவது தனியார் பயிற்றுவிப்புக் கல்லூரிகள் (Tutorial Colleges), தொழில்நுட்ப நிறுவனங்கள், தொடக்க மற்றும் மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப்பள்ளிகள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

**நேர்விற்கேற்ப அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நீங்கலாக, அரசு மானியமின்றி வர்த்தக ரீதியாக நடத்தப்படும் கல்வி பயிற்சி நிறுவனங்களில், அதாவது தனியார் பயிற்றுவிப்புக் கல்லூரிகள் (Tutorial Colleges), தொழில்நுட்ப நிறுவனங்கள், தொடக்க மற்றும் மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப்பள்ளிகள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டவர்கள்**

| *பணியாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (ரூ. காசு)* | | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | | |
| | *மண்டலம்–A* | *மண்டலம்–B* | *மண்டலம்–C* |
| ஆசிரியர் அல்லாத பிற பணியாளர் | | | |
| (அ) எழுத்தர்/தட்டச்சர்/காசாளர்/நூலகர் | 6860.00 | 6646.00 | 6433.00 |
| (ஆ) ஓட்டுநர் | 6646.00 | 6433.00 | 6220.00 |
| (இ) அலுவலக உதவியாள்/தோட்டப் பணியாளர்/ஆயா/காவலாள் | 5580.00 | 5473.00 | 5367.00 |
| (ஈ) துப்புரவுப் பணியாளர் | 5473.00 | 5367.00 | 5260.00 |

*வினங்சச்ச½:* (1) மண்டலங்களின் வகைப்பாடு:– மண்டலங்களின் வகைப்பாடு பின்வருமாறு இருக்கப்பட வேண்டும்.

A, B, மற்றும் C மண்டலங்களில் கீழ்க்காணும் பகுதிகள் அடங்கியிருக்கும்.

மண்டலம் -A: அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம் -B: நகராட்சிகளின் அனைத்து நிலைகள்

மண்டலம் -C: பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஏனைய பகுதிகள்

(2) இசவிநீ°ழம்யட : மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைத்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படி, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது அதாவது 2001 = 100 என்பதன் அடிப்படையில் 161 புள்ளிகள் ஆகும். 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு ரூ. 32.65 (முப்பத்திரண்டு ரூபாய் அறுபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான, அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) ஒரே தன்மையுடைய பணியைச் செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியவீதங்களைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசுச் முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.